**சார்பு நீதிமன்றம், துறையூர்.**

**முன்னிலை.திரு.C.விஜய்கார்த்திக்,M.A.,M.L.,**
**சார்பு நீதிபதி,**
**துறையூர்.**

**OS.No.39/2023**

தேதி: 18.08.2026

பெயர் : முத்துசெல்வன் (வா.சா.1) த/பெ: முத்துகருப்பன்

**1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பு குறுக்குவிசாரணை தொடர்ச்சி**

1. வழக்குரையுடன் நான் மாதிரி வரைபடம் தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். கண்ணனூர் கிராமம் சர்வே எண்.169க்கான வரைபடம் என்றால் சரிதான். மேற்படி வரைபடத்தில் பச்சை வண்ணமிட்டு காட்டப்பட்ட சர்வே எண்.169/1A நிலத்தை தான் என்னுடைய சொத்து என விளம்புகை பரிகாரம் கேட்டு இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். சர்வே எண்.169/1A நிலத்தின் மொத்த விஸ்தீரணம் எவ்வளவு என்றால் 1 ஏக்கர் 91 சென்ட் ஆகும். அதில் 40 சென்ட் மட்டும் நான் கிரையம் பெற்றுள்ளேன். அது பொறுத்து தான் வழக்கு என்றால் சரிதான். சர்வே எண்.169/1A க்கு கீழ்புறம் எனக்கு என்னன்ன சர்வே எண்ணில் சொத்து உள்ளது என்றால் சர்வே எண் தெரியாது ஆனால் மேற்படி நிலத்தை ஒட்டி எனக்கு 2 ஏக்கர் நிலம் உள்ளது. மேற்படி 2 ஏக்கர் நிலத்திற்கு பாதை வசதி வேண்டி தான் வழக்கு சொத்தை நான் கிரையம் பெற்றேன். வழக்கு சொத்து சம்பந்தமாக கிரையம் பெறுவதற்கு நான் கனகலிங்கத்திடம் நேரடியாக பேசவில்லை என்றால் முதலில் நானும் சென்று தான் பேசினேன். சர்வே எண்.169/1A அதற்கு தென்புறம் உள்ள சர்வே எண்கள்.169/2B, 169/6, 169/5 நிலத்தின் வழியாக தான் செல்ல ஆரம்பத்தில் பாதை கேட்டேன் என்றால் சரியல்ல. நான் கனகலிங்கத்திடம் தாவா சொத்தை கிரையத்திற்கு பேசிய போது அவர் கிரையம் செய்து கொடுக்க ஒப்புகொண்டார் என்றால் சரிதான். சென்ட் எவ்வளவு ரூபாய்க்கு கிரையம் பேசினோம் என்றால் 40 சென்ட்டும் சேர்த்து

ரூ.13,000/-த்திற்கு கிரையம் பேசினோம். ஆனால் கனகலிங்கம் என் பெயரில் கிரையம் எழுதி கொடுக்கவில்லை என்றால் சரிதான். கனகலிங்கம் சொத்து பொறுத்து ஜமால், குர்புதீன், ரவிகுமார் ஆகிய மூவருக்கும் சொத்தை பொறுத்து அதிகார ஆவணம் எழுதி கொடுத்தார் என்றால் சரிதான். தாவா சொத்து சம்பந்தமாக கிரையம் பேசி முடித்த பிறகு நேரடியாக எனக்கு கிரையம் எழுதி கொடுக்காமல் ஜமால், குர்புதீன், ரவிகுமார் ஆகிய மூவருக்கும் அதிகார ஆவணம் எழுதி கொடுக்க என்ன காரணம் என்றால் வெளியே சென்றுவர அலைச்சலாக இருக்கும் என்பதால் அதிகார ஆவணம் எழுதி கொடுப்பதாக கூறினார். அதிகார ஆவணம் எழுதி கொடுப்பதற்கும் பத்திர அலுவலகத்திற்கு வரவேண்டும் என்றால் சரிதான். தாவா சொத்தை கிரையம் செய்து கொடுக்க அவர் நினைத்திருந்தால் அப்போதே அவர் பவர் பத்திரத்திற்கு பதிலாக கிரைய ஆவணம் எழுதி கொடுத்திருப்பார் என்றால் சரியல்ல. பவர் பத்திரம் 28.04.2010 ல் எழுதி கொடுத்தார். பவர் பத்திரத்தின் அடிப்படையில் தாவா சொத்தை நான் எந்த தேதியில் கிரையம் பெற்றேன் என்றால் 01.11.2010 ல் கிரையம் பெற்றேன். எனக்கு எழுத படிக்க தெரியும். என்னிடம் காட்டப்படும் ஒப்பந்த பத்திரம் யார் யாருக்கு எழுதி கொடுத்தது என்றால் 01.06.2010 ம் தேதி கனகலிங்கத்திற்கு ஜமால், குர்புதீன், ரவிகுமார் ஆகிய மூவரும் சேர்ந்து எழுதி கொடுத்துள்ளார்கள். ஆனால் அந்த பத்திரத்தில் உள்ள கையெழுத்து அவர்களுடைய கையெழுத்துகள் அல்ல. பவர் பத்திரம் எழுதும்போது நான் பத்திர அலுவலகத்திற்கு சென்றிருந்தேன், ஆனால் அந்த பத்திரத்தில் நான் தரப்பாளராகவும் சாட்சியாகவும் கையெழுத்து செய்யவில்லை என்றால் சரிதான். பவர் பத்திரம் சம்பந்தப்பட்ட எந்த விவரமும் எனக்கு நேரடியாக தெரியாது எனவும் வழக்கிற்காக பவர் பத்திரம் ஏற்பட்ட தேதியில் அங்கு நான் சென்றதாக பொய்யாக சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் பவர் பத்திரம் ஏற்பட்ட தேதியில் நான் சார்பதிவாளர் அலுவலகம் சென்றிருந்தால் என் பெயரில் கிரையம் பெற்றிருப்பேன் அல்லது பவர் பத்திரம் எழுதி வாங்கியிருப்பேன் எனவும் செல்லாததால் தான் நான் எழுதி வாங்கவில்லை என்றால் சரியல்ல. ஜமால், குர்புதீன், ரவிகுமார் ஆகிய

மூவரும் கனகலிங்கத்திடம் கண்ணனூர் கிராம சர்வே எண்கள்.169/2B, 169/6, 169/5 ஆகிய நிலங்களை கிரையம் பெற்றுத் தர ஒப்பந்தம் செய்திருந்தனர் என்றும் அவ்வாறு ஒப்பந்த படி கிரையம் பெற்றுத்தர தாமதம் ஏற்பட்ட காரணத்தால் மேற்படி கனகலிங்கத்திற்கும் அவரது குடும்பத்திற்கும் பூர்வீகமாக பாத்தியப்பட்ட சர்வே எண்.169/1A நிலத்தில் 40 சென்ட் பொறுத்து பவர் எழுதி பெற்று கொண்டார்கள் என்றால் சரியல்ல. மேற்படி விவரம் எதுவும் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. கனகலிங்கம் மேற்படி மூவருக்கும் பவர் எழுதி கொடுத்ததற்காக எந்தவித பிரதிபலனும் தொகையும் பெற்று கொள்ளவில்லை என்றால் சரியல்ல, ரூ.13,000/- பணம் பெற்று கொண்ட விவரம் கனகலிங்கத்திற்கு தெரியும். நான் சொல்வது போல் தாவா சொத்துக்காக ரூ.13,000/- மேற்படி மூவர் கொடுத்திருந்தால் அதற்கான கிரைய ரசீது பெற்றிருப்பார்கள் என்றால் கிரைய ரசீது உள்ளது. கிரைய ரசீது நான் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். கிரைய ரசீது கனகலிங்கம் உண்மையில் எழுதி கொடுத்திருந்தால் வழக்கு தாக்கல் செய்யும் போது அந்த ரசீதை தாக்கல் செய்திருப்பேன் எனவும் அவ்வாறு ரசீது இல்லாததால் வழக்கிற்காக தயார் செய்து தாக்கல் செய்யலாம் என்ற எண்ணத்தில் நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு சொத்து கனகலிங்கத்திற்கு மட்டும் பாத்தியப்பட்ட சொத்து அல்ல அவர் குடும்பத்திற்கும் பாத்தியப்பட்ட பூர்வீக சொத்து என்றால் சரியல்ல. அவர் கிரையம் பெற்ற சொத்து என என்னிடம் கூறினார். யாரிடம் எந்த தேதியில் கிரையம் பெற்றார் என பத்திரம் வாங்கி பார்த்தேனா என்றால் பார்த்தேன். கனகலிங்கம் எந்த தேதியில் யாரிடம் கிரையம் பெற்றார் என்றால் எனக்கு தெரியாது. தாவா சொத்து கனகலிங்கத்திற்கு முழுவதுமாக பாத்தியப்பட்டது அல்ல அவர் சொத்தை பொறுத்து யாருக்கும் ஆவணம் எழுதி கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்துக்காக கனகலிங்கம் எவ்வித பிரதிபலனும் பெற்றுக் கொள்ளாததால் நான் பெற்ற கிரையம் சட்டப்படி செல்லாது என்றால் சரியல்ல. பிரதிபலன் ஏற்படாத கிரைய ஆவணத்தின் படி நான் கேட்டுள்ள தாவா பரிகாரங்கள் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. கனகலிங்கம் தாவா சொத்து

பொறுத்து ஒப்பந்தம் செய்து கொண்ட விவரம் ஜமால்முகமது, குர்புதீன், ரவிகுமார் ஆகிய மூவருக்கும் தான் தெரியும் எனவும் அவர்கள் தான் கனகலிங்கத்துடன் 01.06.2010ம் தேதி சர்வே எண்கள்.169/2B, 169/6, 169/5 ஆகிய நிலங்களை கிரையம் பெற்றுத் தர ஒப்பந்தம் செய்திருந்தனர் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள தாவா தள்ளுபடி செய்ய வேண்டியது என்றால் சரியல்ல. தாவா படி எந்த பரிகாரமும் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

/ உண்மை நகல்/

(ஒப்பம்/-C.விஜய்கார்த்திக்)
சார்பு நீதிபதி,
துறையூர்.